மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

அசல் வழக்கு எண்.195 / 2007

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 16.11.2023ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.அங்கம்மாள் | தொழில் | |
| க/பெ | திரு.நாச்சிமுத்து | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | பல்லடம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

16.11.2023 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை (4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்)

என் வயது 57. வழக்குரையிலும், எனது முதல் விசாரணையிலும் கூறியுள்ள சங்கதிகள் உண்மைதான். பாகம் கோரி இந்த வழக்கு போட்டுள்ளேன். வேறு பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் மட்டும்தான் கோரியுள்ளேன். ளவழகககு சொத்துக்கள் என் அப்பா திருமூர்த்தி கவுண்டரின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் தகப்பனாருக்கு எவ்வாறு வந்தது என பத்திரங்களைப் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. என் அப்பாரின் சொத்து பாகம் மூலம் என் அப்பாவிற்கு வந்தது. என் அப்பாவிற்கு 1954ல் பாகம் பிரிவினை மூலம் சொத்துக்கள் பிரிந்தது. என் அப்பா விவசாயம் மற்றும் ஆடு மாடுகள் மேய்த்து வந்தார். தாவா இரண்டாவது அயிட்ட சொத்துக்கள் என் அப்பா, என் பெரியப்பாவிடம் இருந்து விலைக்கு வாங்கியது. அந்த இரண்டு சொத்துக்களிலும் என் அப்பா மட்டும் விவசாயம்

செய்து வந்தார் என்றால் இல்லை, நாங்களும் கூட்டாக இருந்து வந்தோம். என் அப்பா 1987ல் இறந்தார். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் எனக்கு 5ல் 1 பாகம் உள்ளதாக நான் எழுதிப் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அது எவ்வாறு எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் வாரிசு அடிப்படையில் எங்களுக்கும், என் அம்மாவிற்கும் பாத்தியம் உள்ளது. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் பெண் மக்களாகிய எங்களுக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. என் அப்பா கொடுப்பதாகச் சொன்னார். தற்போது என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.5 ஆவணம் பொய் பத்திரம். அதை எவ்வாறு பொய் பத்திரம் என சொல்கிறேன் என்றால் எனக்குப் படிக்கத் தெரியாது, அதில் உள்ள எனது கையெழுத்தை வைத்து சொல்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும், வாதசாஆ.3 ஆவணம் என்ன ஆவணம் என்றால் ஒரு சங்கர் என்பருக்கு 4 1/2 ஏக்கர் கிரயம் கொடுத்தோம், அதற்குண்டான பத்திரம்தான் என்னிடம் காட்டப்படுவது. எனக்கு நன்கு எழுத, படிக்கத் தெரியும் என்றும் காட்டப்படும் பத்திரங்களைப் பார்த்து என்னால் என்ன பத்திரம் என சொல்ல முடியும் என்றால் சரியல்ல. சங்கருக்கு கிரயம் கொடுக்கும் போது, அதன் கிரயத் தொகை எவ்வளவு என்று எனக்கும் தெரியும் என்றால் அது மூன்று லட்சம். சங்கரிடம் விலை பேசிய போது, சுப்பிரமணியத்தை வைத்து நாங்கள் விலை பேச வில்லை என்றால் ஆமாம். நாங்கள் விலை பேசவில்லை, சுப்பிரமணி வந்து எங்களை கையெழுத்து போட கூப்பிட்டான். சங்கரிடம் கிரயத்திற்கு விலை பேசிய போது, என் தம்பி சுப்பிரமணியுடன் நல்ல உறவில் இருந்தோமோ என்றால் அதிகமாக உறவு இல்லை, ஓரளவு நல்ல உறவுடன் இருந்தோம். என் அப்பா இறந்தவுடன் சுப்பிரமணி எங்களை காட்டிற்குள் அலைலகழித்து விட்டான், அதனால் அவனோடு நல்ல உறவில் இல்லை. நாங்கள் சுப்பிரமணியுடன் நல்ல உறவில்தான்

இருந்தோம் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அப்பா இறந்ததற்கு பின்புதான் எனக்கும், மற்ற சகோதரிகளுக்கும் திருமணமானது என்றால் சரிதான். என் அப்பா இறந்ததற்கு பின்புதான் என் சகோதரர் சுப்பிரமணிதான் முன்னின்று எங்கள் திருமணங்களை நடத்தி வைத்தார் என்றால் இல்லை, எங்கள் தாய்மாமன் வீட்டினர்தான் முன்னின்னறு திருமணம் செய்து வைத்தனர். சங்கருக்கு கிரயம் கொடுத்த அன்று சுப்பிரமணி எங்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் எவ்வளவு என்று ஞாபகமில்லை, அதை அதே இடத்தில் வைத்து அனைவரும் பங்கிட்டுக் கொண்டோம். சங்கர் கொடுத்த கிரயத் தொகையில் பத்தில் ஒரு பங்குதான் சுப்பிரமணி எங்களக்குக் கொடுத்தார் என்றும் தற்போது நான் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு சாரதி என்பவரை எனக்கு யார் என்று தெரியாது. உமாபதி என்பவரையும் யார் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் சங்கருக்கு கிரயம் கொடுத்த பத்திரத்தில் யார் சாட்சிக் கையொப்பமிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. சுப்பிரமணிக்கு எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரத்தில் யார் சாட்சிக் கையெழுத்திட்டார்கள் என்றால் அதுவும் எனக்குத் தெரியாது. சங்கருக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரம் மற்றும் விடுதலைப் பத்திரத்தில் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.5 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை திருட்டுத்தனமாக மறைத்து வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கி விட்டனர். வாதசாஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள ராஜலட்சுமி என்ற கையெழுத்து என் சகோதரியுடையதுதான். அதில் உள்ள கைரேை என் தாயாருடையதுதான் என்றால் சரிதான். போலி பத்திரம் செய்து விட்டார்கள். வாதசாஆ.3 ஆவணத்தில் கையெழுத்துக்கள்

என்னுடையதுதான். மேற்படி வாதசாஆ.3 ஆவணத்தில் என் அம்மாவும் சகோதரியும் கைரேகை மற்றும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கையெழுத்துக்களை எங்கு வைத்து போட்டேன் என்று எனக்குத் தெரியவில்லை. பத்திரம் எழுதியவர் ஆபிசில் உள்ள மாடியில் வைத்து வாங்கினார்கள், எங்கு என்று தெரியவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)